கே.சி. நீலமேகம்

செயலாளர், தண்ணீர் அமைப்பு,

35, அந்தோனியார் கோவில் தெரு,பொன்மலை அடிவாரம்,திருச்சி-620004.

பேச- 94433 01713, மின்னஞ்சல்- thanneerorganisation@gmail.com,
இணையதளம்-www.thanneer.co.in

## பத்திரிக்கை செய்தி

செய்தி ஆசிரியருக்கு, 03.02.15

ஐயா,

திருச்சி மலைக்கோட்டை கோவில் தெப்பக்குளம் தூர்வாரும் பணியில் மாநகராட்சி உடன் தண்ணீர் அமைப்பு இணைந்து தொடங்கியது.

திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி கோவிலுக்கு சொந்தமான தெப்பக்குளம் நந்தி கோவில் தெரு, என்.எஸ்.பி ரோடு, வாணப்பட்டறை மாரியம்மன் கோவில் தெரு, பகுதிகளுக்கு நடுவில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இந்த தெப்பக்குளத்தில் இருந்த தண்ணீர் மாசடைந்து சுகாதாரமற்ற நிலையில் ஏராளமான குப்பைகள், பிளாஸ்டிக் பைகளுடன் இருந்தன.
இதை கடந்த சில மாதங்களுக்கு முன்பு தெப்பக்குளத்தில் இருந்த மாசடைந்த தண்ணீரை மோட்டார் வைத்து வெளியேற்றி வந்தனர். தண்ணீர் முழுவதும் வெளியேற்றப்பட்ட நிலையில் பொக்ளின் எந்திரங்கள்,டிப்பர் லாரிகளை கொண்டு தூர் வாரும் பணியில் மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் தண்ணீர் அமைப்பினரின் ஞாயிற்றுக்கிழமை குளத்தில் உள்ள பிளாஸ்டிக், குப்பைகள் கண்ணாடிகளை எடுக்கும் பணியுடன் களமிறங்கியது.

அதைத் தொடர்ந்து இரண்டாம் நாளாக இன்று செவ்வாய்க்கிழமை காவேரி மகளிர் கல்லூரியின் தண்ணீர் சுற்றுச் சூழல் மாணவர் மன்றத்தின் 25 மாணவிகளும், இரு பேராசிரியர்களும் பங்கேற்றனர்.அவர்களுடன் தண்ணீர் அமைப்பின் தலைவர் எம்.சேகரன், செயலாளர் கே.சி.நீலமேகம், இணைச் செயலர் கி.சதீஸ்குமார், நிர்வாகக்குழுவினர் ஏ.தாமஸ், விஸ்வநாதன், பரணிதரன், விஸ்வா, சீதரன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மாநகராட்சி சார்பில் பிஸ்கெட், தேநீர் வழங்கப்பட்டது.மேலும் தண்ணீர் அமைப்பின் பிளாஸ்டிக் என்னும் எமன், இயற்கையை நேசியுங்கள் என்ற கட்டுரை தொகுப்பு

புத்தகத்தை அப்பகுதி மக்களிடம் கொடுத்து விழிப்புணர்வு பிரச்சாரம் செய்தோம்.
இது தொடந்து பல கல்லுரி மாணவர்கள் மற்ற அமைப்புடன் இணைந்து இப்பணி தொடந்து நடைபெறும்

நன்றி!

கே.சி.நீலமேகம்,

செயலர்,
9443301713